[3rd March 1964

சிறிய சிறிய அமைப்புக் கொண்டுள்ள பஞ்சாயத்து யூனியன் களிலே, பெரிதாக அமைந்திருக்கும் கூட்டு மன்றங்களிலுள்ள பஞ்சாயத்துக்களைப் பிரித்து சேர்ப்பதற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : டிலிமிட் பண்ணும்பொழுது அது பரிசீலனை செய்ய வேண்டிய விஷயம்.

குழாய்க்கிணறுத் திட்டம், புதுக்கோட்டை

*** 134 கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

புதுக்கோட்டை போன்ற பகுதிகளில் குழாய்க் கிணறுத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

கனம் திரு. பூ. கக்கன் : குழாய்க் கிணற்றுத் திட்டத்தை புதுக் கோட்டைப் பகுதிக்கு விஸ்தரிக்க தற்சமயம் உத்தேசம் எதுவும் இல்லை.

There is no proposal to extend the tube well scheme to the Pudukkottai area at present.

திரு. பி. முருகையன் : புதுக்கோட்டைப் பகுதியில் ஆலங்குடி தாலூகாவில் சோத்துப்பாளையில் ஊத்துக்குழிக்குளம், கருக்கா குரிச்சிக்குளம், நம்பப்பட்டி குளங்களில் கோடை காலத்தில் ஊற்றுக்கள் ஏராளமாக வருகின்றன. அந்தப் பகுதியில் இந்தத் திட்டம் இருக்கிறதென்று கலெக்டர் அவர்கள் மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் கூட்டத்திலே கூறினார். அந்தத் திட்டத் தைப் பரிசீலனை செய்து, இந்த ஆண்டில் குழாய்க் கிணறு திட்டத்தை கொண்டு வருவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அப்பேற்பட்ட இடங்களில் விவசாயி களே கிணறுகளுக்காகக் கடன் வாங்கி வெட்டிக் கொள்ளலாம். மாநில சர்க்காரும் விவசாய இலாக்கா மூலமாக, டியூப் வெல்ஸ் ஆர்கனைசேஷன் மூலமாகச் செய்ய வேண்டியது.

திரு. செ. மாதவன் : இந்தக் குழாய்க் கிணறுத் திட்டம் மத்திய சர்க்காருடைய உதவியால் நடத்தப்படுகிறது. அப்படி நடத்தப் படுகின்ற காரணத்தினால், அவர்கள் தண்ணீருக்குப் போதுமான வருமானம் ஒரு இடத்தில் இருந்தால் கொண்டு வருவோம், அவ்வாறு தக்க வருமானம் கிடைக்கவில்லை என்றால் கொண்டு வர மாட்டோம் என்று சொல்லுவது உண்மையா ? அதன் காரணமாக, பின்தங்கிய ராமநாதபுரம் மாவட்டத்தில் இத்திட்டம் ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பது உண்மையா ?

கனம் திரு. பூ. கக்கன் : கிணறுகள் போடும்பொழுது தண்ணீர் போதுமான அளவு கிடைத்தால்தான் நல்லது என்று எக்ஸ்பொ ளோரேட்டரி டியூப் வெல்ஸ் ஆர்கனைசேஷன் நினைக்கிறது. விவசாயி களிடத்தில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 125 கேட்கிறார்கள் ரூ. 45 ரேட்

3rd March 1964]

இருந்தால் பரவாயில்லை என்று விவசாயிகள் சொல்லுகிறார்கள். இந்த மாதிரிக் கிணறுகள் அதிகமாகத் தோண்டவேண்டும் என்று நினைத்துத்தான், எங்கெல்லாம் தண்ணீர் சாதகமாகக் கிடைக்கிறதோ, அங்கெல்லாம், அதிலும் குறிப்பாக தஞ்சாவூர், செங்கல்பட்டு, ராமநாதபுரம் மாவட்டங்களில் டியூப் வெல்கள் தோண்டுவதற்கு ஏற்பாடு செய்து இருக்கிறோம்.

திரு. க. ர. நல்லசிவம் : கோயம்புத்தூர் மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகள் இதற்குத் தகுந்தபடி இருக்கின்றன?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : இந்தக் குழாய் கிணறுத் திட்டம் விவசாயிகளுக்கு மிகவும் சௌகர்யமாக இருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் 20, 30 செட்டுகள் வைத்து வேலை செய்கிறார்கள். இவ்வாறு குழாய்க் கிணறுகள் அமைக்கும்போது அவற்றை டெஸ்ட் செய்வதற்கு எஞ்சின் கிடையாது. அதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். லாரியில் போய், கொண்டுவர வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, இந்தக் குழாய்க் கிணறுத் திட்டம் சரியான முறையில் இயங்குவதற்கும், தண்ணீர் இருக்கிறதா என்று பார்ப்பதற்கும் என்ஜின்களை சப்ளை செய்ய வேண்டியது அவசியம். அவற்றை சப்ளை செய்ய அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. பூ. கக்கன் : அது பற்றி யோசிக்கப்படும்.

செகண்டரி பள்ளிகளில் இலவசப் படிப்பு

* 135 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நம் மாநிலத்தில் செகண்டரி பள்ளிகளில் படிக்கும் எல்லாப் பெண்களுக்கும் இலவசக் கல்வி அளிக்க நமது அரசாங்கம் ஏற்பாடு செய்ய உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have now decided to make education up to Secondary School level free for all irrespective of income.

* 136 *Q.*—SRI M. KALYANASUNDARAM : SRI S. ARUMUGAM : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) when a final decision will be taken on the proposal to give free education to all children up to S.S.L.C. Class; and

(*b*) whether the scheme would be brought into force from the next school-year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Government have now decided to make education up to Secondary School level free for all, irrespective of income.

(*b*) Yes.